# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)



## அவர் எங்களுக்குப் போதும்!

அவர் நமது சொந்த தகப்பனாய் இருப்பது பாக்கியம்! 'உங்கள் பிதா' உங்கள் தேவைகள் இன்னதென்று அறிந்திருக்கிறார்! 'ஏற்ற சமயத்தில்' சகாயம் செய்திடும் கிருபையின் உறைவிடம் அவர்!

'இத்தனையாய்' தகப்பனை அறிந்து வாழும் பிள்ளைகள், மகிழ்ச்சியுடன் "அவர் எங்களுக்குப் போதும்" என களிகூர்ந்திடும் பாக்கியம், நம் அனைவர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் மங்களம் உண்டாக ஒலிப்பதாக! (யோவான்.14:8). -tr



## நம் பிள்ளைகளுக்கு 'சுதந்திர சிறகுகள்' வழங்கி, ஒரு தாய் பழக்க வேண்டும்!

பிள்ளைகள் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு வந்தவுடன், அவர்களை "நம் சகோதரிகளை போலவே" பாவித்து நடத்த வேண்டும்! அல்லாமல், ஒரு அடிமையைப் போல் எண்ணி நடத்தக்கூடாது. பிள்ளைகளுக்கு முன்பாக எப்போதும் மகிழ்ச்சி நிறைந்த தாயாகவே காணப்பட வேண்டும். அப்போது மாத்திரமே, பிள்ளைகள் தாயின் சமூகத்திற்கு வருவதற்கு மகிழ்ச்சியாயிருப்பார்கள். தன் தாயின் சமூகத்தில் மகிழ்ச்சியாயிருக்கும் பிள்ளைகள்..... வேறொன்றை நாடி சென்றுவிட மாட்டார்கள். மேலும் பிள்ளைகளுக்குரிய நியாயமான சுதந்திரங்களை வழங்குவதற்கு ஒரு தாய் ஆயத்தமாயிருக்க வேண்டும். பிள்ளைகளை 'கூட்டில் அடைபட்ட பறவைகள் போல்' வைத்து விட்டால், கூட்டை விட்டு தப்பிச் சென்று, பின்பு தன் கூட்டிற்கு திரும்பி வர விரும்பாத பறவைகளாய் மாறிவிட முடியும்!

தன் பிள்ளைகளை தேவபக்தியில் வளர்க்க பிரயாசப்படும் தாய், அவ்வப்போது பிள்ளைகள் சிறகுகளை எடுத்துச் சென்று பறக்க அனுமதிக்க வேண்டும். அவ்வப்போது பறப்பதற்கு வாய்ப்பு வழங்கினால் மாத்திரமே, அவர்கள் மகிழ்ச்சியுடன் கூட்டிற்குத் தாங்களே திரும்பி வருவார்கள்!

*-Ed*

**2025 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170**/- தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **அக்டோபர் 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A-Zaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall mcf

*‘புயல்’ நம் விசுவாசத்தை பெலப்படுத்தும்*

‘ஓ கர்த்தாவே, நீர் என்னை நடத்தியபடியும், கிறிஸ்துவின் கட்டளைபடியும்தானே நான் முன்சென்று செயலாற்றினேன், அப்படியிருந்தும் நான் சென்ற பாதையில் புயல் வீசுகிறதே?’ என்ற கேள்வியோடு, இயேவின் சீஷர்கள் அவரை நோக்கி “இப்போது பாரும், கடும் புயலிலும் ஆழ்கடலிலும் மூழ்கிப் போகிறோமே! எங்களைக் காப்பாற்றும்” என அவரிடம் உதவி கேட்டு கெஞ்சினார்கள்.

*துன்பத்தில், கர்த்தர் ஏன் அவர்களுக்கு உடனடியாகச் சென்று கைகொடுக்கவில்லை? ஏன் அவ்வாறு தாமதித்தார்? ஆம், துன்பத்தில் நம் விசுவாசம் சோதிக்கப்பட்டு பெலப்படும்படியும்! நம்முடைய ஜெபங்கள் இன்னும் ஊக்கமுள்ளதாய் மாறும்படியும்! கர்த்தருடைய இரட்சிப்பை எதிர்நோக்கிய ஆவல் பெருகும்படியும்! கிரியை நடப்பித்து, அவருடைய இரட்சிப்பை பெறும்போது பேரானந்த* ***நன்றியை அவருடைய பாதத்தில் சமர்ப்பிக்கும்படிக்கே*** *அவர் தாமதித்தார்! ஆகவேதான் “உங்கள் விசுவாசம் எங்கே?” என்ற ஆழமான கேள்வியை அவர்கள் முன்வைத்து, விசுவாச பாடங்களை கற்பித்து, மெதுவாக கடிந்து கொண்டார்!*

இவ்வாறாக கர்த்தர் உங்களை நடத்துவதால், “புயலையும், சீறும் கடலையும் பார்த்து, கர்த்தர் எங்களோடிருக்கிறார்! இரட்சகர் எங்களோடு இருக்கும்போது ‘புயல் காற்றே’ எங்களுக்கு யாதொரு தீமையும் நீ செய்துவிட முடியாது! கொந்தளிக்கும் சூழ்நிலையே, கிறிஸ்துவுக்குள் நாங்கள் ஜெயம் பெற்றவர்கள்!” என்றெல்லாம் நீங்கள் ஏன் அறிக்கை செய்யவில்லை?

‘சூரியன் நன்றாய் பிரகாசித்து கொண்டிருக்கும் நேரத்தில்’ கிறிஸ்துவை நம்பி வாழ்வதைவிட, கொந்தளிக்கும் புயலில் அவரை நம்பி வாழ்வது மேலானதல்லவா? கொடிய புயலில் பரீட்சிக்கப்படாமல் ‘நம்முடைய விசுவாசம் எவ்வளவு?’ என்பதை நாமாக எவ்விதத்திலும் அறிந்து கொள்ள முடியாது! நம்

விசுவாசம் பெருகுவதைக் காண்பதற்கே, கிறிஸ்து நம் வாழ்வின் படகில் அமர்ந்திருக்கிறார்! உண்மைதான், நாம் கர்த்தரிலும், அவருடைய வல்லமையிலும் பெலனடைய வேண்டுமென்றால்....

**"'அந்த பெலன்' துன்பத்திலிருந்தே பிறக்கிறது என்பதை அறிந்து வாழுங்கள்!**

ஒரு பக்தன் கூறியதைப்போல், இனிவரும் புயல் சூழ்நிலைகளில், இயேசு ஆண்டவர் என் வாழ்வின் சிறிய படகில் இருப்பதால், புயலுக்கு அஞ்சுவதற்குப் பதில், **அதை எதிர்கொண்டு புன்னகை பூத்திட பழகுவேன்!** கிறிஸ்து ஆண்டவர் என்னைப் பார்த்து 'கடலின் நடுவே புயலில் அமிழ்ந்து போங்கள்' என்றா கட்டளையிட்டார்? அவரோ "அக்கரை போவோம் வாருங்கள்" என்றல்லவா, ஜெயமாய் அழைத்துள்ளார்! (மாற்கு 4:35). அல்லேலூயா.

- Mrs.சார்லஸ் கஃவ்மென்

---

## நான் தேடி "இயேசுவின் பாதம்" கண்டுபிடித்தேன்!

*'என் இருதயத்தில்' அவரைக் கண்டேன்*

என் உள்ளத்தின் தீராத ஏக்கமெல்லாம் "**ஜெபத்தின் வழியாய் தேவனை கிட்டிச் சேர வேண்டும்**" என்பது மாத்திரமே நிறைந்திருந்தது. தேவன் எனக்குள் கிரியை செய்திடத் துவங்கிய இந்த சரியான நேரத்தில், என் தந்தையின் ஒரு ஆவிக்குரிய நண்பர் எங்கள் வீட்டிற்கு அருகில் வந்தார். அவருடைய வருகை என் தந்தையை மிகவும் மகிழச் செய்தது. என் தந்தையோ அச்சமயத்தில் அதிகமான சுகவீனம் கொண்டிருந்தார். நானும் என் தந்தைக்கு அதிக உதவிசெய்ய முடியவில்லை. என் 2வது மகன் பிறப்பதற்கு ஒரு சில மாதங்களே இருந்தது.

அப்போது எனக்கு வயது 19! அந்த சூழ்நிலையில், என் தந்தையிடம் "தந்தையே நானும் உங்களுக்கு அதிக உதவி செய்ய முடியவில்லை..... இதற்கும் மேலாக, தேவனை முழுமையாய் நேசிப்பதற்கு நான் கொண்டிருக்கும் போராவல் இன்னமும் பூர்த்தியாகவில்லை" எனக் கூறினேன். என்னுடைய உள்ளத்தை நன்கு அறிந்த என் தந்தை, புதிதாக வந்துள்ள அவருடைய ஆவிக்குரிய நண்பரை சந்திக்கும்படி கூறினார். அவர் என் தந்தையின் வயதை விட அதிகமானவர். அவர், **புனிதர் பிரான்ஸிஸ்** வம்சா வழி வந்தவர் என, என் தந்தை குறிப்பிட்டார்.

அவரைச் சென்று பார்க்க முதலில் நான் விரும்பவில்லை. என் தந்தை மீண்டும் என்னை வலியுறுத்தியவுடன், கீழ்படியும் மனதோடு, எனது பணிப்பெண்ணை அழைத்துக் கொண்டு அவரது இல்லம்

சென்றேன். அந்த பரிசுத்தவானோ, ஸ்திரீகளைக் கண்டால், ஒதுங்கிச் செல்லும் தன்மை கொண்டவர். எந்த ஸ்திரீகளையும் பார்க்காமல் 5 வருடம் தனிமையில் வசித்தவர். ஆச்சரியம் என்னவென்றால், 5 - வருடங்களுக்குப் பிறகு அவர் சந்தித்த முதல் பெண்மணி நான் மாத்திரமே! எங்களை அவர் அமரும்படி சொன்னார். அவர் ஏதும் பேசவில்லை. நான் சம்பாஷணையை ஆரம்பித்து "மதிப்பிற்குரிய பரிசுத்தவான் அவர்களே, என் தந்தைதான் உங்களிடம் என்னை அனுப்பினார். எனக்கு ஒரே ஒரு பிரச்சனைதான். அதாவது, என் ஜெபத்தில், நான் உடனே தேவனை தரிசிக்க வேண்டும்! எனக்கு உதவுங்கள்" என தாழ்மையாய் கேட்டேன். அவரோ சில நிமிடங்கள் எதுவும் பேசாமல் அமைதியாயிருந்தார். எங்களை திரும்பியும் பார்க்கவில்லை. பின்பு அவர் "**சகோதரி, உங்களுக்குள் இருப்பதிலிருந்து தேடாமல், இல்லாத ஒன்றை வெளியே தேடுகிறீர்கள். உங்கள் இருதயத்தில் தேவனை தேட பழகி கொள்ளுங்கள், அங்கே அவரை நிச்சயம் காண்பீர்கள்!**" எனக் கூறிவிட்டு, அந்த வரவேற்பு அறையிலிருந்து வீட்டிற்குள் சென்றுவிட்டார்.

அவர் பேசிய வார்த்தைகள் அம்பு வீச்சைப்போல், என் இருதயத்தில் ஆழமாய் துளைத்துச் சென்றுவிட்டது. ஆம், ஆழமான காயத்தை உண்டு பண்ணியது. நொறுங்கிய அந்த இதயத்தின் காயம், அப்படியொரு மகிழ்ச்சியை எனக்குத் தந்தது! அந்த காயம், சிறிதும் ஆறாமல் எனக்குள் எப்போதும் தங்கியிருக்கவே விரும்பினேன்!!

> "
> **இத்தனை ஆண்டுகளாய் நான் தேடிய தெய்வ அன்பின் வழியை கண்டுபிடித்தது போல் உணர்ந்தேன். அதே சமயம், தெய்வ அன்பும் என்னை கண்டுபிடித்ததாக உணர்ந்தேன்!**

என் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கி "ஓ என் கர்த்தாவே, நீர் என் இருதயத்தில்தான் இருக்கிறீர்! என் உள்ளான மனதில், எளிய விதத்தில் உம்மிடம் திரும்பி உம் சமூகத்தை அடைந்து விட நாடிவருகிறேன். ஓ என் அளவில்லா நல்லவரே, எனக்குள் மகிழ்ச்சி இருந்தபோதும் கூட, நானோ உம்மைத்தேடி, அங்கும் இங்கும் ஓடி பாரமடைந்து போனேன். என்னுடைய நிலைமை, ஐசுவரியத்தில் தரித்திரம் போல் இருந்தது! எனது அருகாமையிலிருந்த மேஜையில், சுவையான விருந்து உணவுகள் இருந்தபோதும், நானோ அந்த மேஜைக்கு அருகில் பசியுடன் மயங்கி கிடந்தேன்! ஓ என் நேசரே, பண்டைய பூர்வீகத்தையும், புதுமையையும் கொண்டவரே, உம்மை அடைவதற்கு இவ்வளவு காலம் தாமதமாகி விட்டதே, அது என் மதியீனம்!

*நீர் இல்லாத இடத்தில் உம்மைத் தேடினேன். நீர் இருக்கும் இடத்தில் உம்மைத் தேடாமல் போய்விட்டேன். இப்போது நான், உம்முடைய ஆனந்த சுவிசேஷம் விளங்கிக் கொண்டேன். அன்று நீர் வாய் திறந்து கூறிய "தேவனுடைய ராஜ்ஜியம் பிரத்தியட்சமாய்..... வெளித்தோற்றத்தில் இல்லை! தேவனுடைய ராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறது!" என நீர் கூறியதை நான் இப்போது அனுபவித்திட உம்பாதம் சரணடைந்தேன். என் இதய வாசஸ்தலத்தில் நீர் ராஜனாய் வீற்றிருக்கிறீர். என் இதயமே உமது ராஜ்ஜியம்! இங்கிருந்து தான் உமது மேலான தூய விருப்பத்தை நிறைவேற்றும்படி செய்கிறீர்!" என கண்ணீரோடு ஜெபித்து அவரது பாதத்தை இறுகப்பிடித்துக்கொண்டேன்!!*

*- மேடம் குயான்*

---

## 'காட்டிக் கொடுத்து' துரோகியாய் மாறிய யூதாஸ்!

*'துரோக விதை' அவன் இருதயத்தில் வளர்ந்தது*

யூதாஸ் ஆண்டவரைக் காட்டிக்கொடுத்த காரணமென்ன? பொருளாசையோ! பொறாமையோ! உலக சிந்தையோ! ஏமாந்துபோனதோ! எரிச்சலோ! மனக்கடினமோ! இவையாவுக்கும் அவன் சரித்திரத்தில் இடமுண்டு என்பது உண்மைதான்! ஆனால், இவைகள் வெளியே காணப்படும் **கிளைகளேயன்றி வேரல்ல.**

ஆண்டவரைக் காட்டிக்கொடுக்கும்படி அவன் சீஷனாய் வந்தவனல்ல! தம்மைக் காட்டிக்கொடுக்கும்படியாக ஆண்டவர் அவனைத் தெரிந்துகொண்டதுமில்லை! இவனிடத்தில் பல குறைவுகளிருந்ததுபோலவே மற்றப் பதினொருவரிடத்திலும் குறைவுகள் இருந்தன. இவனைப்போலவே அவர்களும் உலக இராஜ்யத்திற்குரியவைகளை எதிர்பார்த்தார்கள். ஆகிலும், இவனோ **ஒரு துரோகியென்பது** கடைசியில் தான் வெளிப்பட்டது!

மற்றவர்களிடத்திலும் அநேக தவறுதல்கள் இருக்கத்தான் செய்தன. உண்மைதான், ஆண்டவர் பரிசுத்தவான்களையும் பழுதற்ற மனுஷரையும் தமக்குச் சீஷராயிருக்கும்படி தெரிந்துகொள்ளவில்லை. இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிப்பிக்கிற கர்த்தர், இவர்களின் அந்தகாரத்தை அகற்றி, இவர்களை உலகத்துக்கு "வெளிச்சங்களாக்கும்படியே" தெரிந்துகொண்டார்!

"
**தன் சீஷர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு தகுதியற்றவர்களாயிருந்த போதிலும், அவர்களைத் தமது கிருபையால் தகுதியுள்ளவர்களாக்கி,**

**உலகத்தில் அனுப்ப சித்தங்கொண்டார்! இந்த தேவமுயற்சி பதினொருவரில் பலித்தது; யூதாஸிடம் பலிக்கவில்லை!**

ஒரு சீஷனின் சிறப்பான குணம், குருவினிடத்தில் கற்றுக்கொள்ளுதல்! யூதாஸ் சீஷனல்ல, அவன் இயேசுவோடு கூடயிருந்தான், அவ்வளவுதான். அவரிடத்தில் கற்றுக்கொள்ளவோ அவனுக்கு மனதில்லை! கிறிஸ்துவின் வெளிச்சம் தன்னுள்ளத்தில் பிரகாசிக்க அவன் இடங்கொடுக்கவில்லை. மற்றவர்கள் அறிவில் குறைந்தவர்களாயிருந்தும் ஆண்டவர் மீதுள்ள அன்பில் குறைந்தவர்களல்ல, **யூதாஸிடத்திலே அந்த தெய்வ அன்பில்லை!** மற்றவர்களுக்குள்ளிருந்த துர்-சுபாவம் வரவர அழிக்கப்பட்டு, நற்-சுபாவம் வளர ஆரம்பித்தது! யூதாசுக்குள் விதைக்கப்பட்ட நல்ல விதைகள், பலன் கொடாதபடி அவனுடைய துர்-சுபாவமே வளர்ந்து பெருகினது.

பதினொரு சீஷர்களும் தங்களுக்கு விளங்காத காரியங்களை ஆண்டவரிடத்தில் தாராளமாய் கேட்பார்கள். யூதாஸோ எதையும் மனம் திறந்து பேச மாட்டான்! மனம் திறந்து பேசமுடியாதபடி 'லோக சிந்தை' அவனது உள்ளத்தை நிறைத்திருந்ததோ, தெரியவில்லை! ஆண்டவரும் இவனிடத்தில், அதிகமாய் பேசினதில்லை. அவர் உலக சிந்தையைப் பற்றியும் பொருளாசையைப் பற்றியும் சீஷர்களுக்குப் போதித்தது, இவனுக்கு வெறுப்பாயிருந்தது.

அவருடைய பரிசுத்த ஜீவியமும், உன்னத உபதேசமும் மற்றவர்களைப் பரவசப்படுத்தினது! இவனுக்கோ விளங்காத பாஷையாயிருந்தது. **அவன் இருதயம் மாறவேயில்லை.** 'முன்காலத்தில்' மாம்சத்தின்படி பிறந்தவன், வாக்குதத்தத்தின்படி பிறந்தவனைப் பகைத்ததுபோல, மாம்ச சிந்தையுள்ள யூதாஸ், ஆவிக்குரிய ஆண்டவரை வெறுக்காமல் இருந்திருக்க முடியாது! இயேசுவின் சமுகத்தில் போகிறவன், ஒன்று அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது அவரைப் பகைக்க வேண்டும்!

**“ சரீரத்தில் கூடயிருந்து இருதயத்தில் தூரமாயிருந்த யூதாஸ், ஆண்டவருடைய அன்பையும் போதனையையும் ஏற்றுக்கொள்ளாமற்போனதினால், பெருக்கி ஜோடிக்கப்பட்டிருந்த அவன் இருதயத்தில் ஏழு பிசாசுகள் நுழைந்திட இடம் பெற்றன!**

அவனுக்குள் நாளுக்கு நாள் வளர்ந்துவந்த இந்த மனவெறுப்பும் விரோதமுமே ஆண்டவரைக் கடைசியாய் விட்டுப்பிரியவும், அவரை காட்டிக்கொடுக்கவும் அவனை ஏவிற்று! பிரதான

ஆசாரியர் முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்காமற்போனாலும், இவன் அவரைக் காட்டிக்கொடுத்தேயிருப்பான்! அவனிடத்தில் காணப்பட்ட எல்லா பாவங்களுக்கும் "கேட்டின் மகன் (தானாய்) கெட்டுப்போனானேயல்லாமல், சீஷர்களில் வேறு ஒருவரும் கெட்டுப்போகவில்லையே!" (யோவான் 17:12) என்ற வேதவாக்கியம், நாம் யாவருமே விழிப்புள்ள "தெய்வ அன்பின் ஜீவியம்" வாழ்ந்திட தேவன் அருள்புரிவாராக!

- பரமானந்தம் ஐயர்

---

## 'படைவீரனின் ஆவியில்' பிரசங்கபீடம் அனல் வீச வேண்டும்!

*ஜீவனில்லாத சபை, கல்லறையாகிவிடும்*

"எங்களுக்கு சபை கட்டிடம் வேண்டும்!" என்ற வேட்கைக்கு எண்ணற்ற மாந்தர்கள் முண்டியடித்து நிற்கிறார்கள். ஆனால், நெஞ்சம் கனலாகி பாரம் கொண்ட பிரசங்கி அந்த சபையில் உண்டோ? அப்படியில்லையென்றால் 'இதயம் குத்துண்டு' மனம் மாறும் மாந்தர்களை அந்த பிரசங்க பீடத்திற்கு கீழ் நீங்கள் ஒருபோதும் காணமாட்டீர்கள்! துயரமான உண்மை என்னவென்றால், அக்கினி எரிய வேண்டிய அந்த பிரசங்க பீடத்தில் 'அக்கினியை' காணோம்! அல்லது, ஒரு சில சபை பிரசங்க பீடங்களில் மங்கி எரிந்து கொண்டிருக்கிறது. அவர்களின் ஜெபக்கூட்டம் செத்துவிட்டது..... அல்லது, மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கிறது. ஜெபத்திற்கு இவர்கள் கொண்டிருக்கும் மனநிலை "ஓ தேவனே, நாங்கள் ஆவியில் நன்றாய் ஆரம்பித்தோம்.... இப்போது மாம்சத்தில் முடிவடைய போகிறோம்!" என கூறும் தோல்வி அறிக்கையாகவே இருக்கிறது.

> "**கர்த்தருடைய ஊழியனின் தகுதியை, அவனது ஜெப வாஞ்சையை வைத்து அளவிடும் சபைகள் நம் நாட்களில் இல்லை! அவன் எத்தனை வரங்களும் தாலந்துகளும் கொண்டிருந்தாலென்ன? ஒரு நாளில் குறைந்தது 2- மணி நேரமாவது ஜெபத்தில் தேவனை சந்திக்காதவன்..... தேவனுக்கும் அவரது சபைக்கும் பிரயோஜனமற்றவன்!**

சபைகளில் இன்றைய நிலையை ஏறிட்டு பாருங்கள்! 'தட்டுத் தடுமாறி' இனி என்ன நடக்குமோ? என்ற உறுதியற்ற பரிதாப நிலையில் நிற்பதை உங்களால் காண முடிகின்றதா? "அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ" (பிலி.4:8) என்ற நற்பண்புகளை காற்றில் பறக்க விட்டுவிட்டு, பாவம் ஆட்கொண்ட - தீமைகளை அந்த மேடையில், நர்த்தன ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்! சத்திய மார்க்கத்தின்

ஜெயம், இன்று பிரசங்க பீடத்திலும் இல்லை, இன்றைய கிறிஸ்தவ பத்திரிக்கைகளிலும் இல்லை! புராட்டஸ்டண்டு (Protestant) என்பதற்கு, ரோம கத்தோலிக்க சிலை வணக்கத்தை எதிர்த்து நிற்கும் சத்திய மார்க்கத்தார் என்றே பெயர்! ஆனால் இன்றைய ரோம கத்தோலிக்கர்கள், சாரம் இழந்த இந்த புராட்டஸ்டண்டு தேவ மக்களை "கத்தோலிக்கர் அல்லாதவர்கள்" என நகைத்திடும், குன்றிய நிலைக்கு போய்விட்டார்கள். சொல்லுங்கள், பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்குப் போராட இன்று யார் இருக்கிறார்கள்?

> **"படைவீரனின் ஆவியில், பிரசங்க பீடத்தில் அனல் கொண்டு நிற்கும் பிரசங்கவீரன் எங்கே? மனுஷர்களைப் பிடிக்கவந்த அனல் பிரசங்கிகள்..... இப்போது, மனுஷரிடத்திலிருந்து கிடைக்கும் காணிக்கைக்காகவும், பெயர், புகழுக்காகவும் வலைவீசிக் கொண்டிருப்பது துயரம்!**

சத்தியம் விதைக்கும் விதைகளுக்குப் பதிலாய், "உலக ஞான முத்துக்களை" விதைக்கிறார்கள்! 'முத்துக்கள்' என்றாவது முளைத்தது உண்டா? விதைகளே, மண்ணிலிருந்து துளிர்த்து எழும்பி நிற்கும்!

'கருவறையில் பிறக்க' வேண்டிய ஜீவன், கல்லறையில் பிறக்க முடியுமோ? அழியும் மாந்தர்களை ஜீவனுக்குள் நடத்த முடியாத, ஜெபத்தின் வலிமை இழந்த வெற்று பிரசங்கங்கள் யாருக்கு வேண்டும்? ஒருவன் பிரசங்கித்து பிரசங்கித்து அழிந்து போகலாம்..... ஆனால், ஒருவன் ஜெபித்து ஜெபித்து அழிந்ததாக சரித்திரம் இல்லை! உங்கள் ஊழியம் எதுவாயிருக்கட்டும்..... அதை, தேவன் உங்களை அழைத்து ஒப்புக்கொடுத்தாரா? அப்படியானால், சகோதரனே! யாதொரு குளிருக்கும் இடம்தராமல், உங்கள் "நெஞ்சத்தை கனலாக்கும் அக்கினியைப் பெற" ஜெபத்தில் போராடி நில்லுங்கள். இவ்வாறு போராடி பெற்ற "தூய ஆவியின் அனல் கொண்டு" மலடியாகிப்போன பிரசங்க பீடங்களில் துளிர்விடும் உயிரோட்டம் கொண்டு வாருங்கள்!

*- லியோனார்டு ரேவன்ஹில்*

---

## தெய்வ அன்பை அனுபவித்து வளருங்கள்!

*'அன்பு' மலர்ந்து, ஆத்துமாவில் நற்கந்தம் வீசட்டும்*

ஒரு குழந்தை பிறந்தவுடன், பெற்றெடுத்த தன் தாயை நேசிக்கத் தொடங்குகிறது! தாயின் நேசம் ஒன்றே அந்தக் குழந்தையின் மனதில் நிறைந்திருக்கும்! ஆகிலும் பெற்றெடுத்த தாயின் உள்ளம், தன் பிள்ளையை நேசிப்பதைப் போல், அந்தப் பிள்ளை தன் தாயை

நேசிக்க முடிவதில்லை! அந்த பிள்ளையின் வயது வளர வளர, தாயின் அன்பை இன்னும் அதிகமாய் அறியத் தொடங்கி, தாயின் அன்பை பல்வேறு சமயங்களில் ருசித்து மகிழ்கிறது. **மட்டில்லாத, நித்தியமான தெய்வ அன்பை** நாம் முழுவதும் விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால், நம்முடைய ஆவிக்குரிய வயதும், கர்த்தரை அறியவேண்டுமென்ற பேரார்வமும், மட்டில்லாத நித்தியமுள்ளதாய் பரந்து விரிந்திருக்க வேண்டும். அப்போது மாத்திரமே நித்தியமான தெய்வ அன்பை நம்மால் அளந்திட முடியும்!

இருப்பினும், அந்த சிறு குழந்தையைப் போலவே வயது ஆக, ஆக, தெய்வ அன்பையும் அவரது பிரசன்னத்தையும், நாம் விஸ்தாரமாய் ஆண்டு அனுபவித்திட முடியும். நாம் ஆவிக்குரிய ரீதியாய் வளர்ந்து வரும்போது, அவரை அறிகிற அறிவில் நாம் வளர்ச்சி அடைந்து..... அவரை அதிகமாய் அறிந்திடவே விரும்புகிறோம். அந்த வளர்ச்சியில் நாம் மகிழ்வடைகிறோம்! இருப்பினும் நம்முடைய 'வாழ்நாள் காலம் குறுகியது' என நாம் பொறுமையற்று இருப்பதில்லை!

> "**அவரது அன்பை ஆழமாய் அறிந்துக் கொள்ள, அவரை அறிகிற அறிவில் தொடர்ந்து வளர.... நித்தியம் நமக்கு முன்பாக நீண்ட விஸ்தாரத்துடன், நமக்காக காத்திருக்கிறது என்பதை அறிந்து, பூரிப்படையுங்கள்!**

நான் ஒருநாள், ஒரு அழகிய மலரைக் கண்டேன்! அதனுடைய நறுமணம் என் உள்ளத்தை கொள்ளைக்கொண்டது! அந்த நறுமணத்தின் மகிழ்ச்சியில், மலரை நான் உற்று நோக்க.... நோக்க, என்னுடைய அற்புதமான **சிருஷ்டி கர்த்தாவை** என் ஆவிக்குரிய கண்களால் கண்டு உள்ளம் பூரித்து கண்ணீர் விட்டேன்.

இன்று மாலையில் வாடிப்போகும் இந்த மலரைக் காட்டிலும், என் ஆத்துமாவில் தேவன் வைத்திட விரும்பும் **மாறாத கிறிஸ்துவின் நற்கந்தத்தை** நான் எண்ணத் தொடங்கியபோது, மலரிலிருந்து என் கண்களைத் திருப்பி, என் அன்பு இரட்சகரின் முகத்தைக் கண்டேன்!

"ஓ கர்த்தாவே, நீர் எத்தனை ஆச்சரியமானவர், என் ஆத்துமாவின் மீது நீர் காண்பித்திடும் அன்பும், உமது மகிமையான முக பிரசன்னமும் எத்தனை இனியது! அது வாடும் மலரின் நறுமணமல்ல, வாடாத நித்திய நறுமணம்" என ஜெபித்து 'சிருஷ்டி கர்த்தாவே உடுத்துவிக்கும்' அந்த மலர் தோட்டத்தில் முழங்கால் படியிட்டு அவரைத் தொழுதுகொண்டேன்!

- சாது சுந்தர்சிங்

## இயேசு ஜெயித்தார்! 'பாடுகள்' அவரை ஜெயித்திடவில்லை!

*துன்பத்தின் பாதை, நமக்கோ ஜெயத்தின் பாதை*

புதிய ஏற்பாட்டு வேத வாக்கியங்கள் கர்த்தருடைய தாசர்களின் "வாழ்வின் கடினமான காலங்களை" எடுத்துக்கூறுகிறது. ஆகிலும், *யோபு* கொண்டிருந்த 'மன கொதிப்பையோ' அல்லது 'தீர்க்கதரிசிகளுக்கு ஏற்பட்ட காரிருளையோ' அல்லது 'தாவீதின் உயிருக்கு ஏற்பட்ட துயரங்களையோ' குறிப்பிடவேயில்லை. இவர்கள் சந்தித்த துயரங்களுக்கு பெரிய விளக்கங்களும் புதிய ஏற்பாடு குறிப்பிடவில்லை! அதற்கு இணையாக, இரண்டு பெரிய நிகழ்ச்சிகள் மாத்திரமே தரப்பட்டுள்ளன:

> **ஒன்று, இயேசுவின் மரணம்! இரண்டு, இயேசுவின் உயிர்த்தெழுதல்! மனுக்குலத்தின் மொத்த ரூபமான துயரங்களுக்கும், அந்த துயரத்தில் உண்டாகும் இரட்சிப்பிற்கும் ஓர் அடையாளமான விடையாய் 'இந்த 2 – பிரதான சம்பவங்களையே' வேதம் எடுத்துரைக்கிறது. இயேசுவுக்கு உச்சகட்டமாய் நடந்த, கொல்கொதா சிலுவை நிகழ்ச்சியும், அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த நிகழ்ச்சியுமே, புதிய ஏற்பாட்டின் ஜெயமாய் நிலைத்திருக்கும் இயேசுவின் சுவிசேஷமாயிருக்கிறது!**

அப்போஸ்தலர்கள் அனைவருமே தங்கள் விசுவாசத்தை "இயேசு உயிர்த்தெழுந்த 'ஈஸ்டர்' ஞாயிற்றுகிழமையை" மையமாகவே கொண்டிருந்தார்கள். தேவனுடைய சொந்த குமாரன் சிலுவையில் அறையப்பட்ட நிகழ்ச்சியானது, உலக சரித்திரத்திலேயே மிகப்பெரிய துக்ககரமான நிகழ்ச்சியாகும்! அதுவே தங்களுக்குத் தரப்பட்ட 'புனித வெள்ளி' என ஆதி பக்தர்கள் பெற்றிருந்தார்கள். இயேசுவின் சிலுவை நிழலை உற்றுநோக்கிய அவருடைய சீஷர்கள், தங்கள் குருவோடு வாழ்ந்த மூன்று வருடத்தில் கற்றுக்கொள்ளாத மாபெரும் செய்தியை 'சிலுவை பாடுகளை முன்வைத்து' கற்றுக்கொண்டார்கள்:

> **"தேவன் இல்லாததுபோல் தோன்றும் இடத்தில் 'மிக அருகில்' மெய்யாகவே இருக்கிறார்! மரித்தது போன்ற நிலையில் தேவன் மீண்டும் வந்து ஜீவனை தருகிறார்!" என்பதே இயேசுவின் சீஷர்கள் கற்றுக்கொண்ட மிகப்பெரிய பாடம்!**

இவ்வாறாக, இயேசு கொல்கொதாவின் சிகரமான பாடுகளுக்கு முன்பாக அடைந்த: அநீதியான நியாய விசாரணைகள், வஸ்திரம் உருவப்படுதல், சிவப்பு அங்கி அவமானங்கள், கசையடிகள், முள்முடி சூட்டப்படுதல் போன்ற அனைத்துமே, பிற்காலத்தில் நமக்கு ஏற்பட

இருக்கும் துன்பங்களை சந்திப்பதற்கு, சிறந்த மாதிரிப் பெட்டகங்களாய் மாறின!

*தெய்வ அன்பின் நிரூபணத்தை, நாம் இயேசுவை திரும்பிப் பார்த்து ஆறுதல் பெற்றிட முடியும்! அந்த 'புனித வெள்ளி' தேவன் நம்முடைய வேதனைகளை கண்டும் காணாமல் புறக்கணிக்கவில்லை என்பதை நிரூபித்துக் காண்பித்துள்ளது. நம் ஜீவியத்தை தாக்கிடும் தீமைகளும், துன்பங்களும் நமக்கு வேதனை அளிப்பது எவ்வளவோ, அதே அளவிற்கு தேவனும் தன் பங்காக ஏற்றுக்கொண்டு அதை சகித்து வெளிப்படுத்தினார்! "அவர் தாமே பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டார்" எனவும், அவருடைய துயரத்தின் நாட்களில், நம்மைப்போலவே "தேவனுடைய மௌனத்தையும்" இயேசு எதிர்கொண்டு அனுபவித்தார் எனவும், நாம் வாசித்து அறிவது 23-ம் சங்கீதம் அல்ல! அவைகளை, அவர் சிலுவையின் அகோரத்தில் கூறிய சங்கீதம் 22-ம் அதிகாரத்தின் தொனியாகும்! கர்த்தர் உயிர்த்தெழுந்த 'ஈஸ்டர்' ஞாயிறு நமக்கு எதைப் போதிக்கிறது? நிச்சயமாய், 'பாடுகள்' ஒருக்காலும் நம்முடைய ஜீவியத்தை ஜெயித்துவிட முடியாது என்பதுதான்!*

"

**ஆகவேதான், "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும் போது..... அதை, 'தூய்மையான' மிகுந்த சந்தோஷமாக** (PURE JOY) **எண்ணுங்கள்!" என *யாக்கோபு* எழுதினார் (யாக்.1:2,3).**

மேலும், *பேதுரு அதைக் குறிப்பிட்டு* "துன்பப்பட வேண்டியது அவசியமானதால் இப்போது கொஞ்ச காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். 'இதிலே' நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்" என அறிக்கையிட்டார் *(1பேதுரு 1:6).* மேலும், *பவுல் அப்போஸ்தலன்* இவைகளை கோடிட்டு "உபத்திரவங் களிலேயும் நாங்கள் மேன்மை பாராட்டுகிறோம் அல்லது மகிழ்ச்சி யாயிருக்கிறோம்" என்றல்லவா கெம்பீரித்தார் *(ரோமர் 5:2).*

மேலும் அப்போஸ்தலர்கள் குறிப்பிடும்போது, உபத்திரவங்கள் தங்களுக்கு மீட்டுத் தந்த பொக்கிஷங்களை விவரிக்கிறார்: பொறுமை! ஞானம்! மாயமற்ற விசுவாசம்! நீடிய தயவு! தேவபக்தியான நற்குணங்கள்! போன்ற மேன்மையான பிரதிபலன்கள் மாத்திரம் அல்ல, "**கர்த்தரை அறிகிற அறிவும் கனியுள்ள வாழ்க்கையாய்** எங்களிடத்தில் பெருகுகிறது" என்றல்லவா தெரிவிக்கிறார்! *(2பேதுரு 1:5-8).*

*ஆம், இப்போது நாம் களிகூர்ந்திருக்கிறோம்! எதற்கு?* உபத்திரவத்தையோ அல்லது வலியையோ நாம் விரும்பியதால்

அல்ல! அதுஏனென்றால் 'ஈஸ்டர் - உயிர்த்தெழுந்த ஞாயிற்று கிழமையில்' ஏராளமானவைகளை தேவன் செய்திருக்க, இப்போது நம் ஒவ்வொருவருக்கும் வேண்டிய கொஞ்சமானவைகளை செய்யாதிருப்பாரோ? இவ்வாறாக யாக்கோபு, பேதுரு, பவுல் போன்ற தூயவான்கள் 'பற்ற வைத்த அக்கினி' பழைய ஏற்பாட்டு விசுவாசத்திற்கு முற்றிலும் எதிர்மறையாக இருக்கிறது. புதிய ஏற்பாட்டின் கடைத்தொகை வாசகம் என்னவென்றால் "சகலமும்" நன்மைக்கேதுவாக கிரியை நடப்பிக்கிறது! என்ற வியப்பான செய்தியே ஆகும் (ரோமர் 8:28).

ஆகிலும் புதிய ஏற்பாட்டின் ஆழமான பொருள் நிறைந்த இந்த செய்தியை, இக்காலத்தின் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் 'சிதைத்து' விட்டார்கள்! இந்த வேத வாக்கியத்தின் மாசற்ற தன்மையை சிலர் சிதைத்து "தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு, நன்மையானவைகள் மாத்திரமே சம்பவிக்கும்!" என மதியீனமாய் திரித்து வைத்துவிட்டார்கள்.

ஆனால் பவுல் அப்போஸ்தலனோ, இவர்களுடைய கூற்றுக்கு எதிர்வினையாகவே கூறியிருக்கிறார். அதுஏனென்றால் பவுல் குறிப்பிட்ட 'சகலமும்' என்ன என்பதை அடுத்த வசனங்களில் விவரித்தார்: உபத்திரவம்! மோசம்! துன்பம்! பஞ்சம்! நிர்வாணம்! விபரீதம்! பட்டயம்! இவை அனைத்தையும் கடந்து சென்று, சகித்து வாழ்ந்த வாழ்க்கையை நடைமுறைபடுத்தி எழுதினார்.

முடிவாய் அவர் வலியுறுத்தி கூறியதெல்லாம்: **இவை எல்லாற்றிலும்** நாங்கள் முற்றிலும் ஜெயம் பெற்றவர்களாய் நிலைநிற்கிறோம்! என கெம்பீரித்து எவ்வித கடின வாழ்கையும் எங்களை தேவனுடைய அன்பிலிருந்து பிரித்துவிட இயலாது! என முத்திரை பதித்து முழங்கினார்.

சகலமும் நேர்த்தியாய் முடிவடைவதற்கு 'கொஞ்சகாலம் மாத்திரமே' இடையில் இருக்கிறது! இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த லோகம் முழுவதும் அறிந்து கொள்ளும் என்ற மாபெரும் சத்தியமானது "இருளில் மவுனமாய் இருந்துவிட்ட புனித வெள்ளி, மற்றும் ஜெயமே ஜெயமென உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறும்" தேவனுடைய அற்புதமான செயலென அண்டசராசரம் முழுவதும் கண்டுகொள்ளத்தான் போகிறது! அது, நிச்சயமாய் நடந்தேறும்! இந்த மாபெரும் உண்மையை 'கொஞ்சகாலம்' பொறுத்திருந்துப்பாருங்கள்! ஆமென்.

- பிலிப்பு யான்ஸி (USA)

## ‘சுவிசேஷம் அறிவிப்போர்க்கு’ சாட்சியுள்ள ஜீவியம் வேண்டும்!

*உத்தம சுவிசேஷ ஊழியமே தேவனுக்குத் தேவை*

ஜார்ஜ் ஒயிட்ஃபீல்ட் (1714-1770) ஒரு வல்லமையான திறந்தவெளிப் பிரசங்கியார். ‘திறந்தவெளிப் பிரசங்கிகளின் வேந்தன்’ என்று அவர் அழைக்கப்பட்டார். அவர் பிரசங்கிக்க ஆரம்பிக்கும் முன்பும், பிரசங்கித்து முடித்த பின்பும், நற்செய்தியைக் கேட்ட மக்களுக்காக, அவர் தமது கரங்களை உயர்த்தி வல்லமையான மன்றாட்டு ஜெபம் ஏறெடுப்பாராம்.

“

**‘தங்களது சார்பாக’ தேவனுக்குமுன் அவர் கெஞ்சி மன்றாடுவதைக் கேட்கும்போது, திரளான பாவிகளின் இருதயம் அசைக்கப்படுவதுண்டு!**

சகோதர சகோதரிகளே, இவ்வுலகத்தை ஆசீர்வதிக்கும்படி நீட்டப்பட்ட இயேசுவின் கரங்களின் தொடர்ச்சியே, நமது கரங்கள்! ஒரு வகையில், நாமனைவரும் தேவனுடைய தீர்க்கதரிசிகள், நாமெல்லாரும் தேவனுடைய ஆசாரியர்களாகவும் இருக்கிறோம். நாம் தேவனுடைய ஆசாரியர்களாக மாத்திரமல்ல, மக்களின் பிரதிநிதிகளாகவும், தேவனுக்கு முன் நின்றிட வேண்டும்! தேவன் தமது கோபத்தினால், தேசத்தை அழிக்காதபடி திறப்பிலே நிற்க வேண்டிய மனிதர்கள் நாம்! தேவனுடைய நியாயத்தீர்ப்பின் அக்கினியைத் தடுப்பதற்காக, அல்லது தாமதப்படுத்துவதற்காகத் திறப்பிலே நிற்பவர்களாய் இருந்திட வேண்டும்! அதற்காகத்தான் நாம் நமது **“பரிசுத்த கரங்களை உயர்த்த வேண்டும்”** என்று அப்போஸ்தலன் பவுல் அழகாக கூறினார்.

நமது கரங்கள் பரிசுத்தமாக இருக்கின்றன என்று நாம் எப்போது சொல்ல முடியும்? பவுல் அதற்குரிய பதிலை அந்த வசனத்திலேயே தருகிறார். **“கோபமும் தர்க்கமுமில்லாத” கரங்களே பரிசுத்த கரங்கள்!** இது நமது சகவுறவுகளைக் குறித்தும், தேவ மக்களின் சமுதாயத்தில் நாம் எப்படி நடக்கிறோம் என்பதைக் குறித்தும் வலியுறுத்திக் கூறுகிறது. அவைகள் பரிசுத்தமாயிருந்தால்தான், நாம் மக்களுக்காக ஏறெடுக்கும் நமது தனிப்பட்ட அல்லது பொது ஜெபங்கள் ஏற்கப்பட்டுப் பதில் கிடைக்கும்.

“

**எனவே அடுத்த முறை நீங்கள் ஒரு கிறிஸ்தவரல்லாத நபருக்கு ஒரு கைப்பிரதியைக் கொடுக்க முற்படும்போது, உங்களது கை பரிசுத்தமாயிருக்கிறதா என்று நிச்சயித்துக்கொள்ளுங்கள். இவ்வாறு உ;ங்கள் சுவிசேஷ ஊழியம் வலிமை பெறுவதாக!**

*உங்களது கரம் இரத்தத்தினால் கறைபட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். "நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; (ஏனெனில்) உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கின்றன" என வாசிக்கிறோம் (ஏசாயா 1:15-17). ஒரு கொலையாளியின் கரங்கள்தான் இரத்தத்தால் நிறைந்திருக்கும். அப்போஸ்தலனாகிய யோவான் எடுத்துரைத்த சத்தியத்தின்படி, கொலையாளி யார்? "தன்* **சகோதரனைப் பகைக்கிற** *எவனும் கொலையாளியாயிருக்கிறான்" (1யோவான் 3:15).*

*எனவே, நம் ஸ்தல சபையில், நாம் ஒருவருக்கொருவர் சமாதானமுள்ளவர்களாய் வாழவில்லையென்றால், நாம் பரிசுத்த கரங்களுடன் சமாதானத்தின் செய்தியை அறிவிக்கவோ அல்லது மக்களுக்காக ஜெபிக்கவோ முடியாது! என்ற உண்மையை உணர்ந்து, தெய்வ பயத்தோடு 'சகோதரத்துவ அன்பை' பாதுகாத்து, வாழ்ந்திடக்கடவோம்! வலிமையான ஊழியம் செய்திடக்கடவோம்!*

*- R.ஸ்டான்லி BYM*

---

## 'தேவாலயத்தில் ஆர்ப்பரிக்கும்' பாலகர் நாம்!

*உலக ஞானத்தை சாராத 'குழந்தைகளிடமே' துதி உண்டாகும்*

*"**தா**வீதின் குமாரனுக்கு ஓசன்னா" என தேவாலயத்தில் ஆரப்பரித்த 'குழந்தைகளின்' துதியை,* **'பாலகர்களின்' துதியை "ஆம், நான் கேட்கிறேன்" என இயேசு அங்கீகரித்தார்!** *நம் சபையிலுள்ள பாலுண்ணும் குழந்தைகள், அப்படி ஆர்ப்பரித்து துதிக்கவா செய்கிறார்கள்? அதுவல்ல அந்த உண்மை: உண்மை என்னவென்றால், ஓர் எதிர்ப்பான சூழ்நிலையில், நாம் யாவருமே 'ஞானிகளாய், கல்விமான்களாய்' இருந்து "துதிப்பதற்கு இது காலமல்ல" என நியாயம் பேசி,* **உலக ஞானத்தின்படி தர்க்கம்** *செய்கிறர்களாயிருக்கிறோம்! (மத்.11:25). ஆகவே, அங்கு 'துதி இல்லாதபடியால்' நம் வாழ்வின் 'எரிகோ மதில்கள்' அப்படியே தொடர்ந்து நின்று கொண்டிருக்கின்றன!*

*'பாலகர்களின் துதியென' இயேசு போதிக்கும் சத்தியம் என்ன? ஆண்டவர் இயேசு மத்தேயு 18:3-ம் வசனத்தில் குறிப்பிட்டபடி "நாம் திரும்பவும் இந்த பாலக குழந்தைகளாய் மாறிட வேண்டும்" என்ற அவரது விருப்பமேயாகும்! ஓர் எதிர்ப்பான சூழ்நிலையில் நமக்குள்ளிருந்து எழும்பும் நமது சுய புத்தியின் ஞானங்களைக் "களைந்து, களைந்து" முடிவில் குழந்தைகளாய் மாறும் அற்புதம் நிகழ்ந்துவிட்டால் "***பாலகர் துதி உண்டாகிவிடும்*** *" என்ற உண்மையை இயேசு போதித்தார்! (மத்.21:16). இயேசு விரும்பும் இந்த 'பாலகர்*

*துதி' எல்லா இக்கட்டான சம்பவங்களிலும் நம்மில் பூரணமடைய வேண்டும் என்றே ஆங்கில வேதாகமம் இந்த வசனத்தை 'You have Perfected Praise' என்று சுட்டிக்காட்டுகிறது!*

ஆகவே, ஒவ்வொரு சூழ்நிலையிலும், "நமக்குள்ளிருக்கும் உலக ஞானி ஒழிந்து, இயேசு விரும்பும் பாலகராய்" மாறிவிட நாம் துரிதம் கொள்ள வேண்டும்! இவ்வாறு, துதி பூரணமடையும் செயல் ஒவ்வொரு நாளிலும், ஒவ்வொரு சம்பவத்திலும் துரிதமாய் நடைபெறும் பாக்கியத்தை **'பரிசுத்தாவியின் துணைகொண்டு'** பெற்றிட முடியுமென எபேசியர் 5:18,19 வசனங்கள் உறுதிப்படுத்துகிறது! **இதுவே தாழ்மை** எனவும், இவ்வித சுய அறிவின் தர்க்கம் அகற்றிய பாலகர்கள் "பரலோக இராஜ்ஜியத்தில்" பிரவேசித்திடும் பேரானந்தம் பெறுவார்கள் எனவும் மத்தேயு 18:3,4 பூரிப்புடன் அறிவிக்கின்றது.

> "**ஆகவே, எதிர்ப்பான சூழ்நிலையில், நாம் பாலகர்களாய் மாறிட, முற்றிலும் நமது சுய - ஞான, நியாய தர்க்கங்கள் ஒழிந்திட வேண்டும்! சுய - ஞானம் ஒழிப்பது பாதியில் நின்றுவிட்டாலும், அல்லது 99% அளவில் நின்றுவிட்டாலும், "துதி உண்டாகாது! அல்லது துதி பூரணம் அடையாது!" என்பதை எச்சரிக்கையாய் கொண்டு வாழக்கடவோம்!**

**'தாவீதை அழித்திட' அகித்தோப்பேலின் தந்திர "ஞானத்தை" தேவன் அழித்தார்:**

*தாவீதின் மந்திரி சபையில் "அகித்தோப்பேல்" என்ற சிறந்த ஆலோசனைக்காரன் இருந்தான்! (2சாமுவேல்15:12). 'அந்நாட்களில்' அகித்தோப்பேல் கூறும் ஆலோசனை தேவனுடைய வாக்கைப்போல் இருந்தது என, 2சாமுவேல் 16:23 நமக்கு தெரிவிக்கிறது! அன்றுமுதல், இன்று வரையிலும் "தன்னுடைய ஆலோசனையை அல்லது பிரசங்கத்தை தேவ வாக்கென சபை ஜனங்கள் நம்பியவுடன், அகந்தை கொண்டு* ***தங்கள் பிரசங்கத்தை*** *மேன்மைப்படுத்தும் வீழ்ச்சி இன்றும் சபைகளில் ஆங்காங்கு சம்பவிக்கத்தான் செய்கின்றது!" இதனிமித்தமாய் 'தேவ வார்த்தை' புறக்கணிக்கப்பட்டு, 'பிரபல பிரசங்கியின்' ஆலோசனைகள், கண்மூடித்தனமாய் ஏற்றுக்கொள்ளும், அபாய காலத்தில் நாம் இன்று ஜீவித்துக்கொண்டிருக்கிறோம்!*

*அக்காலத்ததில், இஸ்ரவேலில் ஒவ்வொருவருடைய இருதயமும்* ***அப்சலோமைப்*** *பற்றிக்கொண்டிருப்பதை* ***அகித்தோப்பியல்*** *கண்டான்! ஜனங்கள் அப்சலோமிடத்தில் திரளாய் கூடி வந்ததைக் கண்டான்! தாவீதுக்கு விரோதமாய் சூழ்ச்சிகள் (Conspiracy) பலப்படுவதையும் கண்டான்! இவைகளைக் கண்ட அகித்தோப்பியல்,* ***மெஜாரிட்டி***

*முன்னிலையிலிருந்த அப்சலோமை சார்ந்து கொண்டு, 'தேவனுடைய வாக்கிற்கு சமமாய் தான் கருதப்பட்ட' மாமதையில் "தாவீதை முற்றிலும் ஒழிப்பதற்குரிய" ஆலோசனைகளை அப்சலோமிற்குத் தந்தான்! (2சாமு.16:18-20).*

அவ்வாறு அவன் "ஞானமாய் கூறிய ஆலோசனை" என்னவெனில்:

1) யுத்தத்திற்கு வீட்டைவிட்டு தாவீது சென்றுவிட்ட பிறகு, வீட்டிலிருக்கும் உன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளுடன் நீ சென்று 'எல்லோரும் காணும்படி' வேசித்தனம் செய்திடு! (2சாமுவேல் 16:20,21). அதை கண்ணுற்ற இஸ்ரவேலர்கள் அனைவரும், இந்த தாவீது ராஜா, தன் சொந்த மகனையே இவ்வாறு துர்கீர்த்தியான செயலை செய்யும்படி வைத்துவிட்டானே என முடிவுசெய்து, உன் பக்கமாய் சார்ந்து கொள்வார்கள்!

2) என் ஆலோசனைப்படி, யுத்தத்திற்கு வீரர்களுடன் தாவீது ராஜா பயணம் செய்த இந்த நேரத்தில், தாவீது களைப்படைந்து விடாய்த்திருக்கும் இந்த சரியான வேளையில், நான் பன்னிராயிரம் வீரர்களுடன் தாவீதின் ஸ்தலத்திற்கு செல்வேன்! திடீரென்று தாவீதின் ஸ்தலம் சென்றதினிமித்தம் மற்றவர்கள் ஓடிப்போவவார்கள், நானோ, தனிமையிலிருக்கும் ராஜாவை வெட்டிப்போடுவேன்! இவ்வாறாக, இஸ்ரவேல் ஜனங்கள் யாவரும் உன் பக்கம் திரும்பி, உன்னோடு இருப்பார்கள்! (2சாமுவேல் 17:1-3) என ராஜ தந்திரமான சிறந்த ஆலோசனையைக் கூறினான்!

ஆனால், "அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கர்த்தர் கட்டளையிட்டார்" (2சாமு.17:14) என அகித்தோப்பேல் அறிந்தான். காரியங்கள் அனைத்தும் அப்சலோமிற்கும், அகித்தோப்பேலிற்கும் விரோதமாய் நடைபெற கர்த்தர் கட்டளையிட்டு, அதன்படியே கிரியைகள் நடந்தன! காரியத்தின் முடிவுநேரத்தில் "இன்னபடி அகித்தோப்பேல் 'தாவீது ராஜாவிற்கு' விரோதமாய் ஆலோசனை சொன்னான்" (2சாமு.17:21) என்ற அகித்தோப்பியலின் துரோகச் செயலை தாவீது கேட்டான்!

இவ்வாறு "தன் யோசனைகளை கர்த்தர் அபத்தமாக்கினார்" என்பதை கண்கூடாக அறிந்த அகித்தோப்பேல் "நான்றுகொண்டு செத்தான்!" என முடிவடைந்தது (2சாமு.17:23).

*"**அ**ந்தப்படி: ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன்! என தேவன் கூறினார் (1கொரி1:19). வருத்தமான செய்தி என்னவெனில்*

*“உலகமானது சுய - ஞானத்தினாலே தேவனை அறியவில்லை” என்ற வேதபூர்வ உண்மையை (1கொரி.1:21) திரளான விசுவாசிகள் அறியவில்லை! ஆதலால் “தேவனை அறிந்து வாழ வேண்டிய” தேவ ஜனம், தங்கள் சுய - ஞானத்தில் வீணராகிப்போகிறார்களென்ற சோகம்தான், வேதனையளிக்கிறது!*

இனிவரும் நாட்களில் “கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டி” சுய - ஞானம் ஒழித்து (1கொரி.1:30) இக்கட்டு நேரத்தில் பாலக குழந்தைகளாய் மாறி, “ஜெயம் தரும் துதியின் முழக்கத்தை” செலுத்திட கர்த்தர் நம் யாவருக்கும் அருள்புரிவாராக, ஆமென்.

*- T.ரத்தினகுமார்*

---

## என் நேசத்திற்குரியவரை கண்டு கொண்டேன்!

*குழந்தைப்போன்ற விசுவாசத்தால் என்னை ஈர்த்துக்கொண்டார்*

இன்றைய சபைகள், தேவனை இனிய நேசத்துக்குரியவராகவும், ஈர்த்து வசீகரிக்கும் அழகுள்ளவராகவும் கண்டுகொள்ள பொங்கி ஆர்த்தெழவில்லை! ஆகவேதான் சபையில் கட்டிடம் இருந்தும், கூட்டம் இருந்தும் அங்கே ‘ஆனந்த தைல’ ஆசீர்வாதம் இருக்கவில்லை. அன்புள்ளவர்களே, நீங்களோ அந்த இனியவரை கற்று நெருங்கி வர பழகிக்கொள்ளுங்கள். ஏனெனில், அதன் சொல்லொண்ணா இனிமையை என்னால் வார்த்தைகளால் சொல்ல, போதுமானதாய் இல்லை! நான் என்ன செய்வேன்? காரிருளான நேரத்தில் அவரையே தஞ்சமாய் அண்டிக்கொள்ள என்னால் முடிகிறது! அத்தனை நம்பிக்கைக்குரிய அவர் என்னை கவர்ந்த அழகுள்ளவர்! தயையுள்ளவர்! உத்தமமானவர்! என் இனிய நேசத்திற்குரியவர்!

**“என்னை அந்த இனியவர், தீச்சூளையில் வைத்திட சித்தம் கொண்டால், அப்படியே வைக்கட்டும்... நான் அங்கும் அவரை முன்பைவிட அதிகமாய் அறிந்து ருசிப்பேன்!**

ஏனெனில், “இதைச் செய்தது என் அன்பின் தகப்பன்.... தமக்கு பிரியமானதை எனக்குச் செய்வாராக” என்றே சொல்லி நிற்பேன்! கடந்த 50-ஆண்டுகளுக்கு மேலாய் இந்த என் குழந்தை போன்ற விசுவாசத்தில் அவரையே சார்ந்து வாழ்கிறேன் என உறுதியுடன் உங்களுக்கு கூறுகிறேன். உபத்திரவங்களுக்கா பஞ்சம்? அது, ஏராளம் வந்தது! ஆனால் அவை யாவற்றிலுமிருந்து நான் அந்த நேசரால் பராமரிக்கப்பட்டேன். ஆ, அவர் என் இனிய நேசத்திற்குரியவர் என்பதை நான் அறிவேன்! நீங்களும் அறிந்து கொள்ள வேண்டாமோ!?

*- ஜார்ஜ் முல்லர்*

## சீன மிஷனரியாக மரித்த, ஒலிம்பிக் வீரர்!

# எரிக் லிடல்



பாரிஸ் நாட்டில் நடந்த ஒலிம்பிக் பந்தயத்தில், ஸ்காட்லாந்து தேசத்திற்கு முதன் முதலாய் தங்கப்பதக்கத்தைப் பெற்றுத் தந்த ஓட்டப்பந்தய வீரன், எரிக் லிடல்!

இந்த ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தை விட, மாபெரும் பந்தயப் பொருளை லிடல் தன் ஜீவியத்தில் பெற்றார்! ஒரு சில வருடத்தில், ஸ்காட்லாந்தை விட்டு, மிஷினரி பணிக்கென சீன தேசம் வந்து சேர்ந்தார்!!

டியன்சிங் என்ற இடத்தில் தங்கியிருந்த அவர் உடனே வெளியேறி சியோசங் என்ற கிராமத்திற்கு சுவிசேஷ பணியாற்ற செல்லுமாறு லண்டன் மிஷினரி சங்கம் கட்டளையிட்டது. சியோசங் என்ற அந்த கிராமம் கிறிஸ்தவ ஊழியத்திற்கு அபாயம் நிறைந்த கிராமமாகும். ஆகவே, லிடல் தன் மனைவியையும் தன் இரு குமாரத்திகளையும் அந்த கிராமத்திற்கு அழைத்துச் செல்ல முடியவில்லை. அவர்களை டியன்சிங்கிலே தனியாக விட்டு, சியோசங் வந்து சேர்ந்தார்.

லிடலின் முழு மூச்சான தேவபணி யாதெனில், கிராமத்திலிருந்த ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை திடப்படுத்துவதேயாகும். அவ்வாறு, வீடுவீடாகச் சென்று பணியாற்றுவது, வெகு அபாயம் நிறைந்ததாகும். ஆங்காங்கு பயணம் செய்து இந்த அபாயமான மிஷினரி ஊழியம் செய்த லிடல், நாள்தோறும் கம்யூனிசவாத, தேசியவாத விரோதங்களைச் சந்திக்க நேர்ந்தது! அவரது ஊழியத்தில் நித்தம் நித்தம் துன்பமே எஞ்சியிருந்தது!

இத்தனை சீரும் சிறப்புடன் தியாக ஊழியம் செய்த லிடல் 1944-ம் ஆண்டு வெகுவாய் சுகவீனம் அடைந்தார். 1945-ம் ஆண்டு பிப்ரவரி-21ம் தேதி, இடைவிடாது இருமிய லிடலை கைதாங்கி மடியில் வைத்துக் கொண்ட தன் நண்பனிடம் "முழுவதும் என்னை அர்ப்பணித்தேன்" எனக்கூறி தன் ஜீவனை விட்டார். அவரது மூன்றாவது குழந்தை மௌரீன் லிடலின் பிறப்பை காணாமலேயே, லிடல் மரணமடைந்தார். சீனாவிலேயே தங்கியிருந்து ஊழியம் செய்த அவர், ஒலிம்பிக் பதக்கத்தைக் காட்டிலும் மேலான பதக்கம் பெற்றவராய், கர்த்தருடைய சமூகத்தில் இன்றும் ஜொலிக்கிறார்!

- நிரூபித்து வாழும் கிறிஸ்துவின் தாசர்கள்

## ‘பெற்றோர்களின் கடின வாழ்க்கை’ என்னை மாற்றியது!

**11** பிள்ளைகளைக் கொண்ட மிகப் பெரிய குடும்பம்! எனவே, தாயும் தகப்பனும், ஏன்? ஆண்மக்கள் 10 பேர்களும் கூட அந்த கஷ்டகாலத்தில் கடினமாக பாடுபட்டு உழைக்க வேண்டிய ஏழ்மையில் இருந்தோம். ஆண் மக்களாகிய நாங்கள், அக்கம் பக்கத்திலுள்ள விவசாயிகளுக்கு வயல் வேலை செய்து கொடுத்து, பணம் சம்பாதித்ததுடன், வழக்கத்துக்கு மாறான அற்பமான துப்புரவு பணிகளையும் கூட செய்து கொடுத்து, எங்கள் தேவைக்கு பணம் சம்பாதித்தோம்! “கோபோர்த் பையன்கள் நல்ல சுறுசுறுப்பான, எந்த ஒரு வேலையையும் செய்ய அஞ்சாத திறமைசாலிகள்” என்று அந்த பகுதியிலுள்ளவர்கள் எல்லாரும் அவர்களைக் குறித்துப் பேசினார்கள். பிற்காலத்தில், கோபோர்த் அவர்களே அதைக் குறித்துப் பேசும்போது “ஹாமில்டன் என்ற இடத்திலிருந்து இலண்டனுக்கு அருகில் நாங்கள் வசித்த இடம் வரை 70 மைல்கள் தூரத்தை, எனது தகப்பனார் தனது முதுகில் ஒரு சாக்கு மூட்டை மாவுடன் நடந்து வந்திருக்கின்றார். அவர் நடந்து வந்த பாதை அந்த நாட்களில் முட்புதர், செடிகொடிகள் மண்டிக் கிடந்த பாதையாகும்” என்று கூறுவார்.

எனது அருமைத் தாயார், பிள்ளைகளாகிய நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போது எங்களுக்கு தேவனுடைய வசனங்களைப் போதிப்பதிலும், எங்களோடு கூட சேர்ந்து ஜெபிப்பதிலும் மிகவும் கருத்தோடிருந்தார்கள். எனது வாழ்க்கையின் பிற்காலத்தில் நான் “சீனாவின் மிஷனெரியாகச் சென்ற” பெரிய தேவ ஆசீர்வாதத்திற்கு காரணம், எனது தயாருக்கு நான் சங்கீதங்களின் புத்தகத்தை வாசித்ததுதான்! நான் ஐந்து வயதினனாக இருந்த அந்தச் சமயத்தில், எனது தாயாருக்கு சங்கீதங்களைப் பிழையின்றி சப்தமாக வாசிப்பேன். சப்தமாக வாசித்து, வாசித்து தேவனுடைய வார்த்தைகள் மேல் எனக்கு ஒரு பரலோக இன்பமே ஏற்பட்டுவிட்டது! அதின் காரணமாக ஏராளமான தேவனுடைய வசனங்களை நான் மனப்பாடம் செய்தேன்.

அந்த சின்ன வயதிலேயே நான் என்னை ஆண்டவருக்கு ஒப்புவித்து, ஒரு மெய்யான கிறிஸ்தவனாக வாழ்ந்திட, என் தாயும் தகப்பனும் எனக்கு “அஸ்திபாரமாய்” மாறினார்கள்! ஓ வாலிபனே, மந்த இருதயம் (சோம்பல் இருதயம்) கொண்ட இன்றைய கிறிஸ்தவத்தைக் கண்டு ஏமாந்து போகாமல், தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் நேசித்து வளருங்கள்! அப்படியிருந்தால், ஏற்ற காலத்தில் உங்களைக் குறித்த வாழ்வின் நோக்கத்தை தேவன் நிறைவேற்றுவார்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப **QR** பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**